**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 169/2024**
**வழக்கு சாட்சி PW-13**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆடிவேல் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கந்தசாமி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | ஆலங்குளம் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 26.02.2026.

**(1, 2 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆலங்குளம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் புளியங்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கூடுதல் பொறுப்பாக சொக்கம்பட்டி காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 29.05.2018 ம் தேதி, உதவி ஆய்வாளர் நிஷாந்த் பதிவு செய்து வைத்திருந்த காவல்நிலைய குற்றஎண்.124/2018, சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 307, 506(2) இசச மற்றும் Sec 4 of TNPWH Act வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

அன்றைய தினம் 21.45 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் மாரியப்பன் மற்றும் ராஜகுரு ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.12** ஆகும்.

பின்னர் சம்பவயிடத்தில் வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் 52 செமீ நீளமுள்ள அரிவாள் ஒன்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்னர், சாட்சிகள் சிவகாமி, மனோஜ், கருணாகரன், முருகன், பொன்னுத்தாய், தங்கம்மாள், குருசாமி, மாரியப்பன், ராஜகுரு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், அன்றைய தினம் சாட்சிகளின் விசாரணையின் அடிப்படையில் சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 307, 506(2) இதச மற்றும் Sec 4 of TNPWH Act லிருந்து சட்டப்பிரிவுகள் 109, 294(பி), 324, 307, 506(2) இதச மற்றும் Sec 4 of TNPWH Act படி சட்டமாறுதல் அறிக்கையை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டமாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.13** ஆகும்.

பின்னர், 01.06.2018 ம் தேதி, சார்பு ஆய்வாளர் நிஷாந்த் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் இவ்வழக்கின் 1 ம் எதிரியான சிவக்குமார் என்பவர் சிவகிரி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரண்டராகி எங்களிடம் ஒப்படைத்தவரை நீதிமன்ற உத்தரவுப்படி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 25.06.2018 ம் தேதி சாட்சிகள் வள்ளியம்மாள், ராஜேஸ்வரி, சந்திரா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 28.06.2018 ம் தேதி, எதிரிகள் சின்னத்தம்பி மற்றும் சின்னத்தம்பியின் மனைவி வெள்ளத்தாய் ஆகியோர்கள் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. 04.07.2018 ம் தேதி, இவ்வழக்கின் 2 ம் எதிரியான பாப்பா என்ற வெள்ளத்தாய் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. 02.10.2018 ம் தேதி,

இவ்வழக்கில் காயம்பட்டு சிகிச்சையில் இருந்த ராஜேஸ்வரி என்பவருக்கு காயச்சான்று பெற்றேன்.

16.10.2018ம் தேதி வழக்கின் புகார்தாரரான வள்ளியம்மாள் என்பவருக்கு காயச்சான்று பெற்றேன். 02.11.2018ம் தேதி ராஜேஸ்வரி, வள்ளியம்மாள் ஆகியோர்களுக்கு காயச்சான்று வழங்கிய சங்கரன்கோவில் அரசு மருத்துவர் திரு.செந்தில்சேகர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 29.11.2018ம் தேதி, காயம்பட்ட ராஜேஸ்வரி என்பவருக்கு சிகிச்சையளித்து சிகிச்சை விபரம் வழங்கிய திருநெல்வேலி அரசு மருத்துவமனை மருத்துவர்.தினேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், 14.12.2018ம் தேதி, ராஜேஸ்வரி என்பவருக்கு நுண்கதிர் படம் எடுத்து சிகிச்சை வழங்கிய மருத்துவர்.ஆதிநாராயணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், 15.02.2019ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட இராஜேஸ்வரி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று தெரிய வந்ததினால், வழக்கின் சட்டப்பிரிவினை 109, 294(பி), 324, 307, 506(2) இதச மற்றும் Sec 4 of TNPWH Act–விலிருந்து சட்டப்பிரிவுகள் 109, 294(பி), 324, 326 307, 506(2) இதச மற்றும் Sec 4 of TNPWH Act–ன் படி சட்டமாறுதல் அறிக்கையை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டமாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.14** ஆகும். அத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.27 15:42:50 +0530